Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –IV

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி–29 | 13 –08–2004 | வெள்ளிக்கிழமை | ஓசை –177

படச்சுருள்கள் அனைத்தையும் கணினிதொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB

Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,

கணினி முறை வீடியோ மிக்சிங்,

பாடல் பதிவுகள் படம் பிறேம்செய்தல்.

R.V

பந்தல் சேவை, தர்மபுரம்.

அனைத்திற்கும் பொற்காலம் வண்ணக்கலையகம், யாழ்சாலை, கிளிநொச்சி.



(சி-1060)

# திருமலை நகரைச் சூழவுள்ள பகுதிகளில்

# புலிகளின் பலம் அதிகரிக்கப்படுகிறதாம்!

## கண்காணிப்புக் குழுவிடம் சிறிலங்கா அரசாங்கம் முறையீடு

(கொழும்பு)

**திருகோணமலை நகரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகப் பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகள் இராணுவப் பலத்தை அதிகரித்துள்ளதாக சிறிலங்காவின் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் புகார் செய்துள்ளார்.**

இது தொடர்பாக மங்கள சமர வீர மேலும் தெரிவிக்கையில்:

நாட்டில் நீண்டகாலமாக இருந்துவரும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண எடுக்கப்படும் முயற்சிகளுக்கு விடுதலைப்புலிகளின் இராணுவப் பல அதிகரிப்பு பாதிப்பை ஏற்படுத்தும் எனத் தெரிவித்துள்ளர்ர்.

மேலும் திருகோணமலை சம்பூர் பகுதி களில் புலிகள் பதுங்கு குழிகளை அமைத்து வருகின்றனர் எனவும், இது தொடர்பாக கண்காணிப்புக்குழு தீர்மானம் எடுக்கு மென நம்புவதாகவும் தெரிவித்துள்ளார். மற்றும் கிழக்கு மாகாணத்தில் இடம்பெறுகின்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாக அரசு கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளதெனத் தெரிவித்த அவர், தமிழீழ விடுலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாகத்திற்குச் சமமான வகையில் அரசாங்கமும் ஒரு இடைக்கால நிர்வாகம் தொடர்பான ஆலோசனையை முன்வைக்க உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். நேற்று இடம் பெற்ற அமைச்சரவை முடிவுகளை

(iv ஆம் பக்கம் பார்க்க)

## அக்கிசூடான்–தமிழ்ச்செல்வன் நாளை சந்தித்துப் பேசுவர்

(அலுவலக செய்தியாளர்)

இலங்கைக்கான ஜப்பானியத் தூதர் அக்கிசூடான் அவர்கள் நாளை கிளிநொச்சி வருகை தரவுள்ளார்.

கிளிநொச்சி வரும் இவர் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளார்.

நாளை காலை 11.00 மணியளவில் அரசியல் துறை நடுவப்பணியகத்தில் இச்சந்திப்பு நடைபெற இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சோ,கு)

## யாழ்.அபி.குழுத்தலைவராக மாவை சேனாதிராசா தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் அபி விருத்திக் குழுத் தலைவராக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நீண்டகாலமாக எவரும் நியமிக்கப்படாதிருந்த மேற்படி பதவிக்கு மாவை சேனாதிராசா நேற்றுத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை தொடர்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன்.

ஒரு மாவட்டத்தின் அபிவிருத்திக் குழுத் தலைவராக அம்மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ள அமைச்சர் ஒருவரையே நியமிப்பது சமபிரதாயமாகவுள்ளது.

எனினும் யாழ். மாவட்டத்தில் இருந்து தெரிவாகி அமைச்சர் என்ற பதவியில் உள்ள ஈ.பி.டி.பி.யின் செயலாளர் டக்ளஸ் தேவானந்தா தமிழ்மக்களது விரோதியாகவும், தமிழ்மக்களால் ஒதுக்கப்பட்டவராகக் காணப்படுவதையும் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவர் தமிழ் மக்கள் செறிந்து வாழும் யாழ்.மாவட்டத்தின்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## புலிக்ளின் இராணுவப்பலம் திருமலை துறைமுகப்பகுதியில் அதிகரிக்கப்படுவதாக புகார் கிடைத்துள்ளதென்கிறார் ஹொக்லண்ட்

(கொழும்பு)

திருகோணமலைத் துறைமுகப் பகுதியில் விடுதலைப் புலிகளினால் இராணுவபலம் அதிகரிக்கப் படுவது தொடர்பாக அரசாங்கத்திடம் இருந்து தமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் துணைத்தலைவர் ஹொக்றவ் ஹொக்லண்ட் தெரிவித்துள்ளார்.

ஹொக்லண்ட் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப்புலிகளின் இராணுவ முகாம் தொடர்பாக தமக்குக் கிடைத்த புகார் தொடர்பாக நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சருடன் விவாதிக்கவுள்ளதாகவும்,

உண்மையில் அப்படியான முகாம்கள் உள்ளனவா என்பது தொடர்பாக ஆராய்வதில் தாங்கள் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தாங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்று இது தொடர்பாக அவர்களிடம் விசாரிக்கவேண்டும்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## கல்வியியற் கல்லூரி மாணவன் இடைநிறுத்தம் விசாரணையை ம.உ.ஆணைக்குழு ஆரம்பித்தது

(யாழ்ப்பானம்)

யாழ்.கல்வியற் கல்லூரி மாணவனான ர.ரவிராஜ் கற்றல் செயற்பாடுகளில் இருந்து இடைநிறுத்தப்பட்டமை தொடர்பாக,இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

கல்வியற் கல்லூரி நிர்வாகத்தினால் தான் இடைநிறுத்தப்பட்டமை தொடர்பாக பாதிக்கப்பட்ட மாணவனால் முறைப்பாடொன்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் செய்யப் பட்டிருந்தது.

(iv ஆம் புக்கம் பார்க்க)

## பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலான நிதியை பொதுவான திட்டமிடலின் கீழ் செலவு செய்ய முடிவு

### -யாழ்.மாவட்ட பா.உறுப்பினர்கள் ஒன்றித்துத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து கிடைக்கப்பெறும் நிதியினை, யாழ்.குடாநாட்டில் பொதுவான திட்டமிடலின் கீழ் செலவு செய்ய தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் முடிவு செய்துள்ளனர்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் அனைத்து யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏகமனதாக ஒன்றித்து இம்முடிவை எடுத்ததாக பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

கொக்குவில் பொற்பதி வீதியிலுள்ள விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் முன்னெடுக்கப்படவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாகக் கூடி ஆராய்ந்தனர்.

இதில் பாராளுமன்றஉறுப்பினர்களான செ.கஜேந்திரன், பொன்னம்பலம், கஜேந்திரகுமார் ஜி.சிவநேசன், மா.க.ஈழவேந்தன், மாவை சேனாதிராசா மற்றும் திருமதி.பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

(iv ஆம் பக்கம் பார்க்க)

## அந்த்திராக்ஸ் சந்தேக பவுடரைக்கொண்ட கடிதம் வெளிநாடொன்றிலிருந்தே வந்தது

### -அமெ.தூதரக அதிகாரி தெரிவிப்பு

கொழும்பு கொள்ளுப்பிட்டியில் இயங்கும் அமெரிக்க தூதரகத்திற்கு வெளிநாடு ஒன்றிலிருந்தே கடித உறை மூலமாக "அந்த்திராக்ஸ்" என சந்தேகிக்கப்படும் பவுடர் வந்துள்ளதாக அமெரிக்க உயர் ஸ்தானிகராலய சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும் நாங்கள் இதுபற்றிப் பரிசீலனை செய்து வருகிறோம். இதனால் அந்நாட்டின் பெயரை இப்பொழுது குறிப்பிட மாட்டோம் எனவும், பரிசீலனைகள் முடியும்வரை கொழும்பிலுள்ள உயர்ஸ்தானிகர் காரியாலயம் மூடப்பட்டிருக்கும் எனவும் இக் காரியாலய சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.

## அளம்பில் மீனவரின் படகு காற்றினால் அடித்துச் செல்லப்பட்டது

அளம்பில் கிராமத்தைச் சேர்ந்த முத்துலிங்கம் சின்னவன் என்பவரது படகு கடலில் காற்றினால் அடித்துச் செல்லப்பட்டு காணாமற் போயுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு வலிச்சல் தொழிலுக்குச் சென்ற வேளையில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. இது விடயமாக படகின் உரிமையாளரான சின்னவனிடம் கேட்டபோது, அதிகாலை 2.00 மணிக்கு வலைகளை படகிற்குள் மீண்டும் எடுத்துப் போட்ட வேளை தவறுதலாகக் கடலில் வீழ்ந்து படகைக் கைவிட்ட வேளை காற்றினால் படகும் வலையும் அடித்துச் செல்லப்பட்டது என்றும், தான் சுமார் இரண்டரை மணித்தியாலம் நீந்தி கொக்குளாய்க்கு நேரே தொழிலுக்கு

(iv ஆம் பக்கம் பார்க்க)

### -புலிகளின் சமாதான செயலகத்திற்கான-

## அரசின் தீர்வை விலக்கு அனுமதி குறித்து ஜே.வி.பி.உறுப்பினரிடையே முரண்பாடு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்திற்கு நான்கு வாகனங்கள் தீர்வையற்றுப் பெற வழங்கப்பட்ட அனுமதி தொடர்பாக ஜே.வி.பி.உறுப்பினர்கள் மத்தியில் முரண்பாடான கருத்துக்கள் எழுந்துள்ளனவென ஐ.தே.கட்சியின் பதில் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியவேளை அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதேவேளை இவ்வாகனங்களுக்குத்

(iv ஆம் பக்கம் பார்க்க)

# பெற்றோர்களே!

உங்கள் பிள்ளைகளின் A/L பரீட்சை முடிவுகள் திருப்தி யளிக்கவில்லையா?

உங்கள் பிள்ளையின் பல்கலைக்கழக அனுமதி?
உங்கள் பிள்ளையின் வேலைவாய்ப்பு?
மொத்தத்தில் உங்கள் பிள்ளையின் எதிர்காலம்?
விடை: IIS ஆல் மட்டுமே முடியும்.

ஆயிரம் ஆயிரம் மாணவர்களின் எதிர்காலத்திற்கு ஒளியூட்டிய IIS நிறுவனம் உங்கள் பிள்ளையின் எதிர்காலத்திற் கும் வழிகாட்டக் காத்திருக்கின்றது.

உங்கள் பிள்ளை கணினித்துறையில் ஒரு துறைசார் வல்லுநராக, சர்வதேச பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரியாக, கௌரவமான ஒரு வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள அல்லது வெளிநாடு சென்று உயர் கல்வியைத் தொடர்வதற்கு நாம் வழிகாட்டுகின்றோம்.

கவலையை விடுங்கள். மேற்படி விடயம் தொடர்பாகப் பெற்றோர்கள் மாணவர்களுக்கான மிக முக்கிய கலந்துரையாடல் ஒன்று 15.08.2004 ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு IIS இன் தலைமை அலுவலகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. முற்றிலும் இலவசமான இக்கருத்தரங்கில் பங்குகொண்டு உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானியுங்கள்.

IIS என்றும் உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி.

(சி.9785)

**INSTITUTE OF INFORMATICS STUDIES**
'An Edexces approved training Centre'
# 100, Clock Tower Road, Jaffna.
T.P.NO: 021 222 2831/021 222 6933

## வரிவிளம்பரம்

### இறபர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர்ஸ்டாம் (இறபர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும், போட்டோ கொப்பி லேமனேட்டிங் போன்றவைகளையும் உடனுக்குடன் செய்துகொள்ள பிள்ளையார் பொத்தகசாலை கண்டி வீதி, கிளிநொச்சி. T/P.021 2285750 (சி-10064)

### தவறிவிட்டது

சோமசுந்தரம் தங்கம்மா வெலிகண்டல் சந்தி, கண்டாவளை- எனது தே.அ.அ.(இல.4665700958V) பரந்தனுக்கும், வெலிகண்டலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பிரதேச செயலகம் கண்டாவளையில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். தகவல் சோ.தங்கம்மா. (4951)

### விண்ணப்பப்படிவம்

2004ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்குரிய விண் ணப்பப்படிவம் பெற்றுக் கொள்ள விரும்புவோர் எம்மிடம் முன்கூட்டியே பதிவினை மேற்கொள்ளவும். குயிலன் புத்தக சாலை, ஆனந்தபுரம், கிளிநொச்சி. (4952)

---

மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ. சங்கம் [வ.து]
சைக்கிள் புதிய உதிரிப்பாகங்கள், லொறிக்குரிய பழைய ரயர்கள்

# ஏலத்தில் விற்பனை

மேற்படி புதுக்குடியிருப்பு ப.நோ.கூ. சங்கத்திற்கு சொந்தமான சைக்கிள் புதிய உதிரிப்பாகப் பொருட்கள், லொறிக்குரிய பழைய ரயர்கள் ஆகியன 2004.08.21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு தலைமைப்பணிமனையில் ஏலத்தில் விற்பனைக்கு விடப்படவுள்ளன. எனவே மேற்படி பொருட்களை ஏலத்தில் பெற விரும்புவோர் குறித்த திகதியில் தலைமைப்பணிமனைக்கு சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்,
புதுக்குடியிருப்பு
ப.நோ.கூ.சங்கம் (வ.து)

(சி-9177)

---

# மாபெரும் விவசாயக் கண்காட்சி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

*கால்நடை உற்பத்தித் திணைக்களம்

*விவசாயத்திணைக்களம்

*கைத்தொழில் திணைக்களம்

என்பன இணைந்து நடாத்தும்
மாபெரும் விவசாயக் கண்காட்சி

இடம்:- ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை,
வட்டக் கச்சி.

காலம்:- 01-09-2004 தொடக்கம் 04-09.2004வரை

ஆர்வலர்களே!

*தங்கள் சந்தேகங்களைத் தீர்ப்பதற்கும்,
மேலதிக விவசாய அறிவினைப் பெறுவதற்கும்,
*சிறந்த தொழில்நுட்ப முறைகளைக் கண்டறிவதற்கும்,

செய்கை முறையிலும்,ஒளிப்பட,புகைப்படக் காட்சியுடனும், திட்ட விளக்கவுரைகளுடனும் நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள், சிறந்த உற்பத்தியாளர்கள் தங்களிடம் உள்ள விவசாய,கால்நடை உற்பத்திகளை காட்சிக்கு வைப்பதற்கும் , விற்பதற்கும் நாடுங்கள்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்,
வட்டக்கச்சி. (சி.9779)

---

# வீரவணக்கம்

## 03 ஆம் ஆண்டு நினைவலைகளில்



08-06-1983-தாயின் மடியில் 10-04-1985
13-08-2001 தாயக மண்ணில் 13-08-2001

| தமிழீழ தேசியத்துணைப்படை வீரர் | தமிழீழ தேசியத்துணைப்படை வீரர் |
| --- | --- |
| பொ. நகுலேஸ்வரன் | ர. ஜசிந்தன் |
| நி.மு:- யாழ்.மாவட்டம், த.மு:-13 ஆம் கட்டை, தேராவில், உடையார்கட்டு. | நி.மு:- யாழ்.மாவட்டம், த.மு:- விக்கி குடியிருப்பு, நாச்சிக்குடா. |

13.08.2001 அன்று விளக்குவைத்தகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் கிளைமோர் தாக்குதலில் வீரச்சாவடைந்தனர். இம்மாவீரர்களுக்கும் இந்நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தமிழீழ காவல்துறை சிறப்புப் படையணியினர்.

(4953)

---

# மடு அன்னை பெரு விழாவுக்கான

## சிறப்புப் பேருந்துப் பணி

## தமிழீழ போக்குவரவுக் கழகம்

மேற்படி பேருந்துப்பணி 12.08.2004, 13.08.2004, 14.08.2004 ஆகிய மூன்று நாட்களும் பின்வரும் நேர ஒழுங்கிற்கு அமைவாக நடைபெறும் என்பதனை பொது மக்களுக்கு மகிழ்ச்சியுடன்அறியத்தருகின்றோம்.

**நேர ஒழுங்கும், வழித்தடமும்**

**அளம்பில் — மடு**

அளம்பில் அந்தோனியார்கோவில் காலை 7.00 — முல்லைத்தீவு 8.00 — இரட்டைவாய்க்கால்
வலயன்மடம் மாத்தளன் 8.40 — இரணைப்பாலை 9.15 — புதுக்குடியிருப்பு 9.40 - 9.50
பரந்தன் 11.10 — கிளிநொச்சி 11.30 - 11.40 — வன்னேரி 12.55 — செயபுரம் 1.55 — நாச்சிக்குடா 2.10
ஆண்டான்குளம் 4.10 — பரப்புக்கடந்தான் 4.45 — மடு 5.40

**வட்டக்கச்சி — மடு**

வட்டக்கச்சி சூசையப்பர்கோவில் பகல் 11.30 — கிளிநொச்சி 12.15, 12.40 — பரந்தன் 1.00
பூநகரி 2.30 — நாச்சிக்குடா 4.00 — ஆண்டான்குளம் 6.00 — பரப்புக்கடந்தான் 6.45 — மடு 7.30




முகாமையாளர்,
தமிழீழ போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-10071)

# இலங்கைத் துறைமுக அதி.சபையின் திருமலைத் தலைமையக

# நிதி நிர்வாக பிரிவுகளை இடம்மாற்றும் முயற்சியைக் கைவிடுக!

### பா.உறுப்பினர் துரைரெட்ணசிங்கம் அமைச்சிற்குக் கடிதம்

(திருகோணமலை)

இலங்கைத் துறைமுக அதிகாரசபையின் திருகோணமலை நகர தலைமைக்காரியாலயத்திலிருந்து நிர்வாகம்மற்றும் நிதிப் பிரிவுகளை எட்டுமைல் தொலைவில் உள்ள சீனக்குடாப் பிரதேசத்திற்கு இடமாற்றம் செய்யும் நடவடிக்கையை உடனடியாக நிறுத்தும்படி திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் க. துரைரெட்ணசிங்கம் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப்போக்குவரத்து அமைச்சர் மங்கள சமரவீராவைக் கேட்டுள்ளார்.

1997 ஆம் ஆண்டு ஆரம்பமான இவ்விடமாற்ற முயற்சி, பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனின் கடும் எதிர்ப்புக்காரணமாக நிறுத்தப்பட்டது. இப்போது மீண்டும் இவ்விரு பிரிவுகளையும் சீனக்குடாவுக்கு மாற்றும் முயற்சி மேற்கொள்ளப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

துறைமுக அதிகார சபை திருமலை தலைமை அலுவலகம் திருமலை நகரில் துறைமுகத்தை எதிர்நோக்கியபடி வங்கிகள், கடற்படை மற்றும் பொலிஸ் தலைமை அலுவலகங்களுக்கு அருகில் அமைந்துள்ளது. தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களில் பெரும்பான்மையானோர் திருமலை நகரில் வசிப்பவர்கள். நிர்வாகம் மற்றும் நிதிப்பிரிவுகளை எட்டுமைல் தொலைவில் உள்ள சீனக்குடாவுக்கு இடமாற்றம் செய்வது போக்குவரத்துக் கஷ்டங்களை உருவாக்கும், அத்துடன் தமிழ் உழியர்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தலையும் ஏற்படுத்தும் என பாராளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியிருக்கின்றார். (25)

### –திருமலை துறைமுக அதி. சபை அலுவலகத்தை–

## சீனக்குடாவிற்கு இடம்மாற்ற தமிழ் ஊழியர்கள் எதிர்ப்பு

(திருகோணமலை)

சீனக்குடாவுக்கு திருமலை துறைமுக அதிகாரசபை அலுவலகத்திலுள்ள நிதி மற்றும் நிர்வாகம் தொடர்பான இரு முக்கிய பிரிவுகளை மாற்றம் செய்வது துறைமுகத்தில் பெரும்பான்மை இனத்தவர்களின் ஆதிக்கத்தை மேலோங்கச் செய்யும் ஒரு முயற்சியே என்று தமிழ் ஊழியர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சமாதான நிலை உறுதிப்படுத்தப்படாத நிலையில் இவ்விடமாற்றம் நடைபெறுவது தமிழ் ஊழியர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்றும், திருமலையில் தமிழர் பலத்தைக் குறைக்கும் முயற்சிகளில் இவ்விடமாற்றத்திட்டம் முக்கிய இடத்தை வகிப்பதாகவும் தமிழ் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். (25)

### கிளி. நலவாழ்வு அபி. நிறுவன ஏற்பாட்டில்

## ஐக்கிய இராட்சிய மருத்துவக் குழு திருகோணமலையில் சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் அமைந்துள்ள நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் தலைமைப் பணிமனையின் ஏற்பாட்டில் ஐக்கிய இராட்சியத்திலிருந்து வருகை தந்திருந்த வைத்தியர் முத்துவேல் குழுவினர் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குடியிருப்புக்களில் மருத்துவ முகாம்களை நடாத்தியுள்ளனர்.

மேற்படி குழுவினரால் கடந்த 9ஆம் திகதி மூதூர் பள்ளிக்குடாக் கிராமத்தில் 178 பேருக்கும், 10ஆம் திகதி இலங்கை துறைமுகத்துவாரத்தில் 98 பேருக்கும் 11ஆம் திகதி கூனித்தீவில் 200 பேருக்கும் மருத்துவ முகாம் மூலம் சிகிச்சை வழங்கப்பெற்றுள்ளது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள திலீபன் மருத்துவ சேவையினரின் வேண்டுகோளுக்கிணங்க வைத்தியர் முத்துவேல் குழுவினரால் இம்மூன்று இடங்களிலும் மருத்துவ சிகிச்சைகள் மேற்கொள்ளப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ, கு)

## பெண்மணி விபத்தில் காயம்

(ஒட்டுசுட்டான்)

உந்துருளியில் சென்று கொண்டிருந்த பெண்மணியொருவர் வேலிக்கட்டையில் மோதுண்டு படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் சின்ன சாளம்பன் கிராமத்தில் உந்துருளியை ஓட்டிச்சென்று கொண்டிருந்தபோது அதேதிசையில் வந்த வேறு உந்துருளி 'கோன்' அடித்தபோது தடுமாற்றம் ஏற்பட்டு வேலிக்கட்டையில் மோதிப் படுகாயமடைந்தார். படுகாயமடைந்த இந்தப் பெண்மணி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார். சின்ன சாளம்பனைச் சேர்ந்த புலேந்திரன் நந்தா (வயது 25) என்ற குடும்பப் பெண்மணியே காயமடைந்தவராவார். (05)

# வீரவணக்கம்

4ஆம் ஆண்டு நினைவலைகள்




தாயின் மடியில் 1985 - 04 - 01

தாயக மண்ணில் 2001 - 08 - 13

வீரவேங்கை ஜசிந்தன்

இரத்தினசிங்கம் – ஜசிந்தன்

5ஆம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில் 1981 - 12 - 22

தாயக மண்ணில் 2000 - 08 - 01

வீரவேங்கை கடற்காவலன்

இரத்தினசிங்கம் – பவீந்திரன்

கொஞ்சும் மழலையாய் பிஞ்சு முகத்துடன் நீ
பறந்தோடிச் சென்றதால் நெஞ்சழியும் வரை
நின் நினைவுகளை நொந்து சுமக்கின்றோம்
கனவில் ஒரு முறை உன் திருமுகம் காணக்
கலங்கும் உன் உறவுகளை
ஒரு கணம் வந்து பாரடா

இந் நாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும்
இந் நாளில் நினைவு கூறுகின்றோம்.

தாமரை வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம்.

என்றும் இவர்கள் நினைவில் வாடும்
அம்மா, அப்பா, அக்கா, தம்பி, அண்ணா.

தகவல்– இ.பவிதா (ஆயப்பகுதி)

(4877)

## காதர் கைதான விதம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி கண்டனம்

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம். காதர் கைது செய்யப்பட்ட விதம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சி தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளது. குற்றம் சுமத்தப்பட்டவர் மீது சாதாரண சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுவதை தமது கட்சி எதிர்க்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பதில் செயலர், ஏ.ஆர்.எம். காதர் கைது செய்யப்பட்ட விதமானது கண்டிக்கத்தக்கது எனக் குறிப்பிட்டுள்ளார். முன்னாள் கூட்டுறவுத்துறை அமைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அப்துல் காதர், கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து எதிர்வரும் திங்கட்கிழமை வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிமன்ற நீதிவான் சரோஜினி குசல வீரவர்தன உத்தரவிட்டார். கடந்த ரம்ழான் காலத்தில் பள்ளிவாசல்களுக்கு வழங்கவென 10 லட்சம் ரூபாவை அரிசிக் கொள்வனவுக்காக பெற்றபோதும் அவை பள்ளிவாசல்களுக்கு உரிய முறையில் பகிரப்படவில்லை என குற்றம் சுமத்தியே காவல்துறையினர் முன்னாள் அமைச்சரைக் கைது செய்தாக நீதிமன்றத்தில் தெரிவித்தனர். இதில் ஒரு மூடை 1450 ரூபா பெறுமதியான 690 மூடை சம்பா அரிசியின் பயன்படுத்தல் கணக்கு உரிய முறையில் இல்லை எனவும் காவல் துறையினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். இந்த நிலையிலேயே முன்னாள் அமைச்சர் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட பிணை மனுவை நிராகரித்த நீதிவான் விளக்கமறியல் உத்தரவைப் பிறப்பித்தார்.

## கரைச்சி பி.செயலக காணி அலுவலக நடமாடும் சேவை இன்று உருத்திரபுரத்தில்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக காணி அலுவலக நடமாடும் சேவை இன்று உருத்திரபுரம் மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில் நடைபெறவுள்ளது.

உருத்திரபுரம் வடக்கு, எள்ளுக்காட்டு பகுதிக் காணி உரிமையாளர்களுக்கான உறுதி வழங்கும் நிகழ்வும் மற்றும் உறுதியற்றவர்களுக்கு உறுதி வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

காணி உறுதிப்பத்திரத்திற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளவர்கள் காணி அனுமதிப் பத்திரங்களுடன் வருகை தருமாறு கரைச்சி பிரதேசசெயலக காணி உத்தியோகத்தர் செ.ஸ்ரீரெங்கநாதன் வேண்டியுள்ளார். (சோ,கு)

## மகாறம்பைக் குளத்தில் குடிநீர் பெறுவதில் நெருக்கடி!

(வவுனியாசெய்தியாளர்)

மகாறம்பைக் குளத்தில் நீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமையால் அப்பகுதி மக்கள் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

இக்கிராமத்திலுள்ள 300இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்குமெனச் சில குழாய்க்கிணறுகளே அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் சில பழுதடைந்த நிலையில் உள்ளன. இயங்கக்கூடிய நிலையில் உள்ள குழாய்க்கிணறுகளில் பலவற்றில் நீர் வற்றியுள்ளமையால் இப்பகுதிமக்கள் பெரும் கஷ்டத்தை எதிர்நோக்கி வருகின்றனர். (10)

### -ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை 2004-

## தாயக நேரப்படி காலை 9 மணிக்கு வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

15.08.2004 (ஞாயிறு) அன்று வன்னிப் பிரதேசத்தில் நடைபெறவுள்ள சகல பரீட்சை நிலையங்களிலும் தாயக நேரப்படி காலை 9.00மணிக்கு ஆரம்பமாகும் எனத் துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் மா.தேவேந்திரன் அறியத்தந்துள்ளார்.

இந்நேர விடயத்தில், பரீட்சார்த்திகள், பொறுப்பாசிரியர்கள், பெற்றோர்கள் கூடிய கவனம் எடுக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். (சோ,கு)

### — இரண்டாவது டெஸ்ட் போட்டி —

## நெருக்கடியான நிலையில் தென்னாபிரிக்கா அணி!

(கொழும்பு)

கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெற்றுவரும் சிறிலங்கா - தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்ட முடிவின்போது மூன்று விக்கெட்டுக்களை இழந்து 116 ஓட்டங்களை (3/116)ப் பெற்று நெருக்கடியான நிலையில் தென்னாபிரிக்கா உள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 470 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இரண்டாம் நாள் ஆட்டம் தொடங்கியபோது 3/303 என ஆட்டத்தைத் தொடங்கிய சிறிலங்கா அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 470 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சங்கக்கார சிறப்பாகத் துடுப்பாடி 232 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சேன் பொலக் 81 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 3/ 116 என்ற நிலையில் நேற்றைய ஆட்டம் முடிவுற்றது.

# ஒலிம்பிக் - 2004 எதென்சில் இன்று ஆரம்பம்



# கடுமையான தாக்குதலை அடுத்து

# கூட்டுப் படையினர் நஜாப் நகரிற்குள் நுழைவு

## 165 பேர் பலி; 1200 பேர் கைது



(பாக்தாத்)

ஈராக் நஜாப் நகரைக் கைப்பற்று வதற்காக அமெரிக்கக் கூட்டுப் படையினர் மேற்கொண்ட கடும் தாக்குதலுக்குப் பின்னர் சுமார் நான்காயிரம் கூட்டுப் படையினர் நஜாப் நகரினுள் நுழைந்துள்ளனர்.

நஜாப் நகரில் நிலை கொண்டிருந்த ஷியா மதகுருவான மட்ஷடா அல்சதாருக்கு ஆதரவான ஆயுதக் குழுவினரின் ஒருவாரகால கிளர்ச்சியை அடக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கையே நஜாப் நகர் மீதான முற்றுகை என அமெரிக்கப் படையினர் வர்ணித்துள்ளனர்.

இமாம் அலியின் தர்க்காவிற்கு அருகிலுள்ள மயானப் பகுதியில் உள்ள ஆயுதக் குழுவினரின் நிலைகளில் பெரும் வெடிச் சத்தங்கள் கேட்ட அதேவேளை, நகரின் மேலாக கருமையான புகை மூட்டங்களும் காணப்பட்டுள்ளன.

அமெரிக்கக் கூட்டுப்படையினரின் தாக்குதலுக்கு எதிராக ரொக்கட்டுக்கள் மூலம் ஏவப்படும் கைக்குண்டுகள் மற்றும் மோட்டார் தாக்குதல்களையும் ஷியா முஸ்லிம் தீவிர வாதிகள் நடத்தியுள்ளனர். இதேவேளை, நஜாப் நகர் மீதான இறுதித் தாக்குதலை ஈராக் கியப் படையினர் மாத்திரமே நடத்துவார்கள் என ஈராக் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த மோதல்களின்போது கடந்த புதன் கிழமை முதல் இதுவரை ஈராக்கெங்கிலும் 165 பேர் கொல்லப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, புனிதத்தலங்களில் இருந்து கிளர்ச்சியாளர்களை முற்றாக அகற்றும் வரை இராணுவ நடவடிக்கை தொடருமென பாக்தாத்தில் நடந்த செய்தியாளர் மாநாடொன்றில் பாதுகாப்புத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளதுடன் கடந்த சில நாட்களில் ஆயிரதது இருநூறு பேர் பிடிக்கப்பட்டுள்ளனர் எனவும், இவர்களில் பலர் ஈராக்கியர் அல்லர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நிர்மாணப் பணிகளில் நிதி துஷ்பிரயோகம்

# கணக்கு அறிக்கை சமர்ப்பிக்கச் சனாதிபதி கோரல்

பெரும்பாலான மாகாண சபைகளில் நிர்மாணப் பணிகளில் இடம்பெற்று வருவதாகக் கூறப்படும் நிதி துஷ்பிரயோகம் தொடர்பாக கணக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு சந்திரிகா குமாரதுங்க தனது புலனாய்வுப் பிரிவிற்கு உத்தரவிட்டுள்ளார்.

அநேகமான மாகாண சபைகளில் கட்டட நிர்மாணப் பணிகள் குறிப்பாக கட்டடங்கள், குளங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் திருப்திகரமாக முன்னெடுக்கப்படுவதில்லையென்று தனக்கு கிடைத்த அறிக்கைகளின் அடிப்படையிலேயே இவ் உத்தரவைத் தான் பிறப்பித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி கட்டட நிர்மாணப் பணிகளில் உரிய கேள்வி நடைமுறைகள் பின்பற்றப்படாதிருப்பதாகவும், உரிய தரக்கட்டுப்பாட்டு அறிக்கைகள் பெறப்படாது கொடுப்பனவுகள் செய்யப்படுவதாகவும் தெரிவித்துள்ள சனாதிபதி சாத்தியமான அறிக்கைகள் இன்றி தான்தோன்றித்தனமாக மேற்கொள்ளப்படும் நிர்மாண வேலைகள் அதிக முக்கியத்துவம் பெறுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பாக வட-கிழக்கு மாகாணசபையின் ஆளுநருக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ள அவர், மத்திய அரசினால் வழங்கப்பட்டுள்ள கேள்வி வழிகாட்டியை மீறி மாகாண அமைச்சரவை நிர்மாணப் பணிகளை எடுத்துவருவதாகத் தனக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக விழிப்பாக இருந்து தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு புலனாய்வுப் பிரிவிற்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ள சனாதிபதி சரியான முறையில் நிர்மாணப் பணிகள் இடம்பெறுவதை உறுதிப்படுத்துமாறும் பணித்துள்ளார்.

## கண்காணிப்புக்குழு அலுவலகம் முன் ஈ.பி.டி.பி யினர் நேற்று ஆர்ப்பாட்டம்

திருகோணமலை திருஞானசம்பந்தர் வீதியில் வசித்த ஆத்மலிங்கம் றமணி (வயது 49) என்ற ஈ.பி.டி.பி உறுப்பினர் கடந்த செவ்வாய்க்கிழமை இனம் தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி உயிரிழந்தார் இதனை ஆட்சேபித்து.

திருகோணமலை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தின் முன்பாக ஈ.பி.டி.பி.யினர் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உயிரிழந்த ஈ.பி.டி.பி.உறுப்பினரின் சடலத்தை தாங்கியவாறு இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை ஈ.பி.டி.பி.உறுப்பினர்களுக்கு பாதுகாப்பைப் பெற்றுத்தருமாறு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருகோணமலையில் நடைபெற்ற ஈ.பி.டி.பி. உறுப்பினரின் கொலைக்குப் பின்னால் விடுதலைப் புலிகள்தான் உள்ளனர் எனக்கூறமுடியாதென இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் துணைத் தலைவர் ஹெக்றுவ் ஹொக்லண்ட் கூறியுள்ளார்.

இந்தக்கொலை தொடர்பாக தமக்கு புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதாகக்கூறியுள்ள அவர், இது தொடர்பான விசாரணையை பொலிசார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

### -இல.இனப்பிரச்சினைக்குத் தீர்வு-

# ஐக்கிய இலங்கைக்குள் பூரண சுயாட்சி இந்.இடதுசாரிகளின் விருப்பம் இதுவே

### இந். புலனாய்வாளர் சீத்தாராம் ஜக்கூரி

(புதுடில்லி)

இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக ஐக்கிய இலங்கை என்ற வரையறைக்குள் ஒரு பூரண சுயாட்சி ஒன்று உருவாக வேண்டும் என்பதே இந்திய இடதுசாரிக்கட்சிகளின் விருப்பமென இந்திய மத்திய புலனாய்வுப்பிரிவு உறுப்பினர் சீத்தாரம் ஜக்கூரி நேற்று தெரிவித்துள்ளார்.

இலங்கை இடதுசாரிகளின் முன்னேற்பாடற்ற பரஸ்பர கருத்துப் பரிமாற்று அழைப்பை ஏற்று சில தெரிவு செய்யப்பட்ட பத்திரிகையாளர்களுடன் நடைபெற்ற சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு தொடர்ந்து அவர் கருத்துத்தெரிவிக்கையில்:-

இலங்கையில் சகல சிறுபான்மை சமூகத்தினரதும் உரிமைகள் மதிக்கப்படவேண்டும் என்பதே இந்திய இடதுசாரிகளின் நிலைப்பாடு. அத்துடன் பல பத்தாண்டுகள் நீண்ட பிரிவினை வாதத்திற்குத் தீர்வை இலங்கை மக்களும், அரசியல்வாதிகளும் தீர்மானிக்க வேண்டுமென்றார்.

### தேர்தலில் அடையாளத்தை உறுதிப்படுத்தும்

# சட்டத் திருத்தத்திற்கு உயர் நீதிமன்றம் அனுமதி

எதிர்வரும் தேர்தலின் போது வாக்காளர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும். இது தொடர்பாக சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்படவுள்ளதாக பொது மக்கள் நல்லிணக்க அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார். அண்மையில் இதற்காக சட்ட வலுக் கோரி சனாதிபதி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவுக்கு அனுமதி கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை சமாதான முயற்சிகள் தொடர்பாக தாம் சனாதிபதி, எதிர்க்கட்சி தலைவர் உட்பட பல தரப்பினரையும் சந்தித்துப் பேசவுள்ளதாக மல்வத்த மகாநாயக்கர் தம்மிடம் கூறியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## திருமலை...

அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.அதைத், தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்.

புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாக யோசனைக்கு எதிர்ப்பானதல்ல இது. அவர்களின் கொள்கைகளுக்கு மத்தியில் நாம் ஏதாயினும் ஒன்றைச் சமர்பிக்க வேண்டும் என்ற நோக்கில் தான் இதனை முன்வைக்கின்றோம். நாம் இடைக்கால நிர்வாகம் என்பது என்ன? என்று யோசிக்கிறோமோ அதனைத்தான் இதில் கூறவுள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றவேளை மேசையில் வைக்கவேண்டிய விடயங்கள் தொடர்பாகத்தான் அதில் கூறப்படும் எனவும், இது புலிகள் சமர்பித்துள்ள இடைக்கால நிர்வாகத்திற்கு எதிரானதல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## கல்வியற்...

இம் முறைப்பாட்டடிப்படையில் ஆரம்ப கட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில், அடுத்த கட்ட விசாரணைகள் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

இவ்விசாரணைகளுக்காக யாழ் கல்வியற் கல்லூரியின் பீடாதிபதி மற்றும் கல்வியற் கல்லூரியின் ஆணையாளர் ஆகியோர் நேரில் ஆஜராகி வாக்கு மூலமளித்திருந்தனர். (27)

## அரசின்..

தீர்வைவிலக்கு வழங்குவது தொடர்பாக அமைச்சரவையில் தீர்மானம் எடுக்கப்பட்டது. இவ் அமைச்சரவையில் நான்கு ஜே.வி.பி. உறுப்பினர்கள் இருக்கின்றனர். அவர்களும் அதற்கு அன்று இணக்கம் தெரிவித்துள்ளனர். ஆயினும் நேற்று முன்தினம் பதுளையில் உரையாற்றிய ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச நாம் சமாதானச் செயலகத்திற்கு தீர்வை விலக்கு வழங்கப்பட்டதை எதிர்க்கின்றோம் என தெரிவித்துள்ளார். எனினும் ஜே.வி.பியின் நான்கு அமைச்சர்களும் இணங்கிக்கொண்டதன் அடிப்படையில் தான் இவ் வாகனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே ஜே.வி.பி. மத்தியில் முரண்பாடு எழுந்துள்ளது. அதை அவர்கள் தீர்த்துக் கொள்ள வேண்டும். அப்படி இல்லாவிட்டால் அவ் அமைச்சர்கள் நான்குபேரும் விமல்வீரவன்சவிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையைக் கோரவேண்டும். அல்லது விமல்வீரவன்ச கூறுவது சரியாயின் அவர் நான்கு அமைச்சர்கள் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு கட்சியைக்கோருவாரா என வினாவும் எழுப்பியுள்ளார். (32)

## யாழ்...

அபிவிருத்திக் குழுத்தலைவராக நியமிக்கப்படத்தகுதியற்றவர் என்பதையும் அடிப்படையாக வைத்தே மாவை சேனாதிராசாவை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் யாழ். மாவட்ட அபிவிருத்திக குழுத் தலைவராகத் தெரிவு செய்துள்ளனர் என்றார். (33)

## பன்முகப்...

பிற்பகல் 3.00மணிமுதல் 7.00 மணிவரை நீடித்த இச்சந்திப்பில் யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினைச் சேர்ந்த சொலமன் து.சிறில் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

அதியுயர் பாதுகாப்பு வலயம் காரணமாக இடம்பெயர்ந்து முகாம்களில் வசிக்கும் மக்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி வழங்கவென கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒதுக்கீட்டிலிருந்து ஒரு மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதேபோன்று கடற்படையினரின் ஆக்கிரமிப்பினுள் உள்ள மண்டைதீவுப் பகுதியில் குடியமர்ந்துள்ள மக்களிற்கு அடிப்படைப் போக்குவரத்து வசதிகளை வழங்கவென வாகனமொன்றினை வழங்கவும், அதேபோன்று தரை வழித் தொடர்பேதுமற்ற நெடுந்தீவு உள்ளிட்ட தீவுப்பகுதி மக்களுக்கு குடிநீர் வசதிகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் செ.கஜேந்திரன் தெரிவித்தார். (27)

# மடுத்திருப்பதிக்கு பெருமளவான பத்தர்கள் வருகைதர ஆரம்பம்

(வவுனியா செய்தியாளர்)

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ள மடுமாதா தேவாலய வருடாந்தப் பெருவிழாவை கண்டு தரிசிப்பதற்காக பெருமளவான தென்பகுதி பத்தர்கள் மடுமாதா தேவாலயப் பகுதிக்கு வருகை தந்து கொண்டிருக்கின்றனர்.

பத்தர்கள் மடுமாதா ஆலயத்திற்கு வருகைதர ஏதுவாக எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடக்கம் செவ்வாய்க்கிழமை வரை மடு வீதி இருபத்துநான்கு மணித்தியாலயமும் திறந்திருக்கும்.

பத்தர்களின் தேவைகளைத் தீர்க்கவென தேவாலய நிர்வாகமும் மன்னார் அரச செயலகமும் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.(10)

## விலை அதிகரிக்காது

(கொழும்பு)

இந்நாட்டில் அதிகமாக வறிய மக்கள் வீட்டுப்பாவனைக்கு மண்ணெய் பாவிப்பதால் மண்ணெய் விலை அதிகரிக்கப்பட மாட்டாது என நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

## அளம்பில்...

வந்த புல்மோட்டை தொழிலாளர்களினால் அளம்பில் கடற்கரையில் விடப்பட்டதாகவும், தான் மயிரிழையில் உயிர் தப்பியதாகவும் தெரிவித்த அவர் கரை திரும்பியதும் சக தொழிலாளர்களின் உதவியுடன் இயந்திரத்தையும் படகையும் தேடியபோதும் கிடைக்கவில்லையென்றும் இப்படகினை யாராவது கண்டெடுத்தால் தயவு செய்து அன்னை வேளாங்கன்னி கோவிலடி, அளம்பில் என்ற முகவரிக்குத் தெரியப்படுத்துமாறும் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.(20)

## காணியற்றோர் பதிவுசெய்க

வட்டக்கச்சி சிவிக்சென்ரர் கிராமசேவகர் பிரிவில் காணியற்ற அனைவரையும் பதிவுசெய்து கொள்ளுமாறு கிராமசேவகரின் செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது. (15)

## புலிகளின்...

எனவும் ஏனைய புகார்களைப் போலவே இந்தப் புகாரினையும் த்தாங்கள் விசாரிப்போம் எனவும் இதற்கு நேரம் பிடிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 13ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.